# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.72/2015

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 வேல்முருகன், வயது 44, த/பெ துரைசாமி**

**நேரம் -12.10**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காண்பிக்கப்படும் **வா.சா.ஆ.6** ஆவணம் எப்போது வாங்கப்பட்டது என்றால் 24.04.2017 அன்று வாங்கப்பட்டதாகும். மேற்படி ஆவணமானது தாவா வழக்கை தாக்கல் செய்த பின்னர் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் **வா.சா.ஆ.6** ஆவணத்தில் என்ன சர்வே எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு நத்தம் சர்வே எண். 680/5 என உள்ளது. அதேப்போல் பழைய சர்வே எண் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் **வா.சா.ஆ.4** ஆவணம் என்ன ஆவணம் என்றால் என் பாட்டி சரோஜாம்மாள் எனக்கு 10.10.2014 அன்று எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகும். மேற்படி **வா.சா.ஆ.4**ல் உள்ள சொத்து விவரத்தை தான் நான் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. **வா.சா.ஆ.4**ல் உள்ள ஜக்பந்திகள் சொல்ல முடியுமா என்றால் ஆம், ரங்கசாமி நிலத்திற்கு கிழக்கு, ஆதி முருகேசன் நிலத்திற்கு தெற்கு, ஆறுமுகம் நிலத்திற்கு வடக்கு, பால கவுண்டர் நிலத்திற்கு மேற்காகும். மேற்படி **வா.சா.ஆ.4**ல் உள்ள சொத்து விவரத்தில் பழைய சர்வே எண் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு இல்லை என்று கூறினார். **வா.சா.ஆ.1** ஆவணப்படி **வா.சா.ஆ.4** எழுதப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5. என்ன ஆவணம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு 15.12.2014 அன்று முனியம்மாள் என்பவர் காவேரி என்பவருக்கு

எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமாகும். மேற்படி **வா.சா.ஆ.5**ல் உள்ள சொத்து விவரத்தில் பழைய சர்வே எண் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு இல்லை என்று கூறினார்.

3. **வா.சா.ஆ.1** ஆவணப்படி **வா.சா.ஆ.5** எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 3ம் பக்கத்தில் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள 2 அயிட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கி X மே 12 கெஜம், வ X தெ 12 கெஜம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் பொதுவில் கி X மே 6 கெஜம், வ X தெ 6 கெஜம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. அதேப்போல் 2ம் அயிட்டத்தில் கி X மே 6 3/4 கெஜம், வ X தெ 6 1/2 கெஜம் என்றாலும் அதில் பொதுவில் கி X மே 3 1/2 கெஜம், வ X தெ 3 1/4 கெஜம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை.

4. **வா.சா.ஆ.1** ஆவணத்தில் உள்ள வாசகங்களின் கையெழுத்து எனக்கு சரியாக புரிந்து கொள்ள இயலவில்லை என்றால் சரிதான். மேற்படி **வா.சா.ஆ.1** ஆவணத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். **வா.சா.ஆ.1**ல் உள்ள சங்கதிகள் என்ன என்று ஆவண எழுத்தரிடம் கொடுத்து என்ன விவரம் உள்ளது என்று அதன் பிரதியை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. **வா.சா.ஆ.4** மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் **வா.சா.ஆ.1**ஐ அடிப்படையாக கொண்டு எழுதப்பட்ட ஆவணங்கள் என்றாலும், ஆகையால் அதை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். **வா.சா.ஆ.1**ல் உள்ள விவரங்கள் எனக்கு புரியவில்லை என்றாலும் அதை நான் நீதிமன்றத்திற்கு புரிய வைக்கும் கடமை எனக்கு உள்ளது என்றால் சரிதான்.

5. **வா.சா.ஆ.1**ல் 3ம் பக்கத்தில் 2ம் அயிட்டத்தில் உள்ள உங்கள் வகையறா மான்ய தோட்டத்திற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு தெரியவில்லை என்று கூறினார். மேற்படி ஆவணத்தில் உள்ள வாசகம் எனக்கு புரியவில்லை என்பதால் நான் தெரியவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து வேறு என்றாலும், எனக்கும், காவேரிக்கும் எழுதி கொடுத்த தான்

செட்டில்மெண்ட் **வா.சா.ஆ.4** மற்றும் **5** சொத்து வேறு என்றால் சரியல்ல, வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில்தான் மேற்படி ஆவணங்கள் எழுதப்பட்டது. **வா.சா.ஆ.1**ல் 3ம் பக்கத்தில் 2ம் அயிட்டத்தில் உள்ள உங்கள் வகையறா மான்ய தோட்டத்திற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது போல் **வா.சா.ஆ.4** மற்றும் 5ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அப்போது ஐக்பந்தி வேறு, தற்போதைய ஐக்பந்தி வேறு என்பதால் குறிப்பிடவில்லை.

6. வா.சா.ஆ.1, 1946க்கு பின்னர் 2014ல்தான் அடுத்த ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். 1946 முதல் 2014 வரையான கால கட்டத்தில் நான்தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தேன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், 2014க்கு பிறகுதான் ஆவணங்கள் மூலம் தாவா சொத்தை பெற்றுக் கொண்டேன். என தாய் வழி தாத்தா **வா.சா.ஆ.1**ஐ 1946ல் கிரையம் பெற்றார் என்றாலும், 1981 ல் காலமானார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. **வா.சா.ஆ.4** மற்றும் **5**ல் உள்ள ஆவணங்களில் என் தாய் வழி தாத்தா 1981ல் காலமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு என் பாட்டி சரோஜாம்மாள், சின்ன பாட்டி முனியம்மாள் ஆகியோர்கள் அனுபவித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1981 முதல் 2014 வரையான கால கட்டத்தில் என் பாட்டி சரோஜாம்மாள், சின்ன பாட்டி முனியம்மாள் ஆகியோர் தாவா சொத்தை அனுபவித்து வந்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. 1946ல் குறிப்பிட்டுள்ள சொத்தை என் பாட்டி சரோஜாம்மாள், சின்ன பாட்டி முனியம்மாள் ஆகியோர் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல, அவர்கள்தான் தாவா இடத்திற்கு முன்னாடி வசித்து வருகிறார்கள். என் தாத்தா சந்தா கவுண்டருக்கு பிரதிவாதிகளின் தாத்தா நேரடி உறவுமுறை என்றால் சரியல்ல, தூரத்து உறவுமுறை. தாவா சொத்தை ஜாகீர் காலத்திலேயே நாராயண கவுண்டருக்கு மான்யமாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாராயண கவுண்டர் காலத்திற்கு பின்னர் அவருடைய ஒரே மகனான கிருஷ்ண கவுண்டர்தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால்

சரியல்ல. அதேப்போல் தாவா சொத்தை கிருஷ்ண கவுண்டர் காலத்திற்கு பின்னர் அவரின் மகன்கள் 5 பேர் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

8. தற்போதும் தாவா சொத்தை மேற்படி 5 நபர்களின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1946ம் ஆண்டு என் தாய் வழி தாத்தா வாங்கிய சொத்து வழக்கு சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தைதான் **வா.சா.ஆ.4** மற்றும் 5ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆகையால **வா.சா.ஆ.4** மற்றும **5** ஆவணங்கள் பிரதிவாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது மற்றும் சட்டப்படி மேற்படி ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல, செல்லும். வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கும், எனக்கும் உரிமை இல்லை என்றாலும், எந்த பரிகாரமும் கோர முடியாது என்றாலும், ஆகையால் நான் நிரந்த தடையுத்தரவு கோரி இவ்வழக்கை தாக்கல் செய்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

9. தாவா வழக்கில குறிப்பிட்டுள்ள சொத்தில பாதி காவேரி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவரை நான் இவ்வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை தற்போதும் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஆதரவாக சாட்சியாக காவேரியை இவ்வழக்கில் விசாரணை செய்ய இயலுமா என்றால் முடியும். வழக்கு சொத்தில் பாதி பாகம் காவேரிக்கு பாத்தியப்பட்டதால் அவரை அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றால் எனக்கும் காவேரிக்கும் 2 ஆக பாகம் பிரித்து மேல்பாகம் எனக்கும், கீழ் பாகம் காவேரிக்கும் என பிரிக்கப்பட்டுள்ளது. எந்த வருடம் மேல் பாகம், கீழ் பாகமாக பிரிக்கப்பட்டது என்றால் வாய் மொழியாக 2015ம் வருடத்தில் பிரித்து கொண்டோம். தேதி மற்றும் மாதம் ஞாபகமில்லை. 2015ம் ஆண்டில்தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதால், தாவா வழக்கு தாக்கல் செய்த பின்னரா அல்லது அதற்கு முன்னரா என்றால் தாவா வழக்கை தாக்கல் செய்த பின்னர்தான்.

10. மேற்படி விவரங்களை எதையும் நான் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது நாராயண கவுண்டருக்கு

சொந்தமானது என்பதால் அவரின் வாரிசுதாரர்களும் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. நாராயண கவுண்டர் வாரிசுதாரர்களையும் மற்றும் காவேரியை வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்காத காரணத்தால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல, சொத்திற்கும், அவர்களுக்கும் சம்மந்தம் இல்லை. தாவா இடத்தை பிரதிவாதிகள் பார்வையிட வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் தாவா இடத்தை பார்வையிடும் போது நான் மற்றும் பிரதிவாதிகள் உடன் இருந்தோம் என்றால் சரிதான்.

11. மேற்படி வழக்கறிஞர் ஆணையர் என்ன அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் 1946ல் ஏற்பட்ட சொத்தும், தாவா சொத்தும் வேறுபட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை ஆகையால் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.**

**நேரம் 1.05**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni